கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com

தலைவர்:- உயர்திரு க.அரியரத்தினம். 07823535094

வைகாசி மாத இதழ்
NEWS BULLETIN
MAY 2021
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
12/09/20 முதல்	புதிய தவணைக்கான தமிழ்ப்பாட , கலைப்பாட வகுப்புகள் Zoom செயலி மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தவணையும், ஆசிரிய வேதனத்துக்காகத் தவணைக்கு £25 அல்லது ஒரு வருடத்திற்கு (மூன்று தவணைகள்) £70 அறவிடப்படுகிறது. கலைப்பாட ஆசிரியர்களின் தொடர்புகளுக்கு கர்நாடக சங்கீதம் திரு.தீனதயாளன் 07886969194 திருமதி.வானதி 07523431759 பரதநாட்டியம் திருமதி சத்தியகௌரி 07773591591 திருமதி அஜந்தா 07425577697 மிருதங்கம் - செல்வன்.தனுஜன் 07582418364 வீணை - செல்வி.சாத்விகா 07556130208 மேலும் தகவல்களைப் பெற்றுக்ககொள்ள திருமதி பொன்மணி 07436542925 அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.
26/06/21	பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையினர் நடாத்தும் இணையவழித் தமிழ் மொழிப் பரீட்சை

பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் தமிழ்மொழிப் பரீட்சை 2021

தற்போதுள்ள நெருக்கடி நிலைமையைக் கருத்தில் கொண்டு, மிகக் கவனமான ஒரு கருதுகோளின் அடிப்படையில், பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையானது, இந்த வருடத்துக்கான தமிழ் மொழிப் பரீட்சையினை எதிர்வரும் **26/06/2021** அன்று இணைய வழிமூலம் நடாத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது.

இப்பரீட்சைகள் இணையத்தளம் மூலமே நடைபெறுவதால், விண்ணப்பித்தோருக்கான user name and password பெற்றோருக்கு அனுப்பி வைக்கப்படும். பெற்றோருக்காக வடிவமைக்கப்பட்டுள்ள பிரத்தியேக இணையக் கணக்கினுள் நுழைவதன் மூலம் பரீட்சைக்குரிய வினாத்தாள்களைப் பரீட்சை அன்று தரவிறக்கம்(Download) செய்து மாணவர்களுக்கு வழங்க முடியும். பரீட்சை முடிந்த பின்னர் விடைத்தாள்களை Scan பண்ணுவதன் மூலம் மீள அனுப்ப முடியும். இதற்கான நேரமும் வழங்கப்படும்.


ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் இருப்பின், அவர்களுக்கு ஒரு கணக்கிலக்கமே வழங்கப்படும். தமிழ்ப் பாடசாலையானது இதற்குப் பொறுப்பாக இருந்து, பெற்றோர் தங்களுடைய பிரத்தியேகக் கணக்கினுள் நுழைவதற்கு அனுமதி வழங்கும்.

மேலதிக விபரங்களுக்குத் தமிழ்ப் பாடசாலையைத் தொடர்பு கொள்ளவும்.



முள்ளிவாய்க்காலில் ஒரு இனம் முகவரி தெரியாது அழிக்கப்பட்டு, முட்கம்பிச் சிறைக்குள் அடைக்கப்பட்ட நாள்! காணாமல் ஆக்கப்பட்டும், படுகொலை செய்யப்பட்டும் ஒரு இனவழிப்பு நடந்தேறிய இரத்தக்கறை படிந்த நாள்! அந்த இறுதிக் கணங்களின் ரணங்களை, இழப்புக்களின் துயரங்களை நெஞ்சிலே சுமந்தவாறு நகர்ந்து கொண்டிருக்கின்றோம்.

சர்வதேசம் எம்மைத் திரும்பிப் பார்க்கும், அந்த இனவழிப்புக்கான நீதி கிடைக்கும், குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள், காணாமலாக்கப்பட்டோர் வீடு திரும்புவார்கள் என்ற எதிர்பார்ப்புக்களோடும், தளராத நம்பிக்கைகளோடும் நாம் எல்லோரும் ஒன்றுபடுவோம். நீதியைக் கேட்போம்!



தாயகத்தின் வலி

என் பிரிய தாயகமே
உன் சோகிதங்கள் எங்கு போயின.

நான் புரண்டெழுந்த மணல்
மேடு எரிந்தும் புதைந்தும்
நெஞ்சில் வந்த வலி
நெருடலாகவே உள்ளது

ஐ பத்து ஆண்டுகள் மேலாக
உண்ண உணவிழந்த
உறவுகள் பல இழந்த
உணர்வுகளுடன் நம்மினம்

கண்ணீரும் இரத்தமும் சிந்தி
கலங்கிய தமிழீழ உறவுகளின்

வலி எவ்வாம் எப்படி
வரிகளாக கவி எழுதமுடியும்

வலி சுமந்த தாயகத்தை
மீட்க யார்தான் வருவார்கள்

எப்படி மறப்போம்.....?
தாயகத்தின் வலி சுமந்த
நாட்களை

செல்வி உகினா பார்த்திபன்
வகுப்பு=5

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் போது நடைபெற்ற, திரு புலிக்குட்டி அவர்களால் எழுதப்பட்டு, தமிழர் கல்வி கலைபண்பாடு நடுவத்தினரால் வெளியீடு செய்யப்பட்ட “தடைகள் தகரும் தமிழீழம் மலரும்” நூல் வெளியீட்டில், கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் உயர்திரு கந்தையா அரியரத்தினம் அவர்கள் கலந்துகொண்டு, பிரித்தானிய தேசியக் கொடியை ஏற்றியதோடு, நூலின் சிறப்புப் பிரதி ஒன்றையும் பெற்றுக் கொண்டார்.




கொவன்றியின் சுற்றுப்புறச் சூழலைச் சுத்தமாக வைத்திருப்போம்

வேல்ஸ் அரசர் பெருமதிப்புக்குரிய சாள்ஸ் அவர்கள் கடந்த 25/05/21 அன்று கொவன்றி மாநகருக்கு வருகைதந்து, அதனுடைய சுற்றுப்புறச் சூழலைப் பார்வையிட்டார்.

அத்தோடு கொவன்றியிற் செயற்படும் சில தொண்டு நிறுவனங்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அந்தவகையிலே, கொவன்றியின் கால்வாயை அண்மித்த பகுதிகளைச் சுத்தமாக வைத்திருக்கும் பணிகளில் ஈடுபட்டு வரும் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் சார்பில், சிரேஷ்ட உபதலைவர் வைத்தியர் சதானந்தன் ரத்னம், கனிஷ்ட உபதலைவர் திரு விஜயரூபன் விவேகானந்தம், செயலாளர் திரு துறைவன் சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.





உலக சுற்றுச்சூழல்
தினம்

மரம் செடிகொடிகள் எல்லாம்,
பூமியின் சுகப்பிரசவத்தால் பிறந்தவை.

நாம் அவரின் கருவரை வரை,
தோண்டி கட்டிடங்கள் ஆக்கினோம்.

தினைத்தால் மரமாகும்,
பிளாஸ்டிக்கை புதைத்தால் மண்ணும் மலடாகும்.

இலைகள் சருகானதால் உரமானது,
இன்று ரசாயனம் உரமானதால் உணவே விஷமானது.

நிழமில்லா நீருக்கும் சாயமேற்றினோம்,
சிட்டுக்குருவியின் சிறகுகள் கொஞ்சம் தொலைத்தோம்
சிங்கம் கிடைத்தது.

கழிவை எரிக்க கூட காற்றும் தோதில்,
எருகோ ஓர் உயிரினம் வாழும் நமக்காக.

மனிதா, சுற்றுச்சூழலை நாம் பாதுக்காதவிடில்,
உலகும் பொறுமை இழக்கும் தானே?

நாம் செயல்க தொடங்கும் பணியை,
நமை மறுசுழற்சி செய்யும்.

ஆக்கம் - அஞ்சலா மதிமன்னராஜா.
ஆண்டு - 8ம்.

நோன்புப் பெருநாள் / ஈதுல் பித்ர்



முஸ்லிம்களின் முக்கிய பெருநாளாக ஈதுல் பித்ர்" நோன்புப் பெருநாள் விளங்குகின்றது. இது சமத்துவம், சகோதரத்துவம், சாந்தி, சமாதானம் என்பவற்றை ஏற்படுத்தும் உன்னத நாளாக விளங்குகின்றது.

உலகில் வாழும் முஸ்லிம்கள் கடந்த மே 13ஆம் திகதியன்று புனித இந்நாளைக் கொண்டாடி மகிழ்ந்தனர். நோன்புப் பெருநாள் என்பது இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளான,

1. இறைவன் ஒருவன் என்று ஏற்றுக்கொள்ளுதல்.
2. ஐவேளை இறைவனை வணங்குவது.
3. "ஸ்காத்" தர்மம் செய்தல்.
4. நோன்பு நோற்பது.
5. புனித ஹஜ்.

என்பனவாகும். இதில் நான்காவது கடமையான நோன்பினை இஸ்லாமிய மாதங்களில், ஒன்பதாவது மாதமான றமழான் மாதத்தில் பகல் முழுவதும் நோன்பு நோற்பதாகும். இதன் மூலம் 11 மாதங்களாக லௌஹீக விடயத்தில் ஈடுபட்ட நமக்கு இந்த ஒரு மாதமும் ஆத்மிகத்தினைக் கட்டியெழுப்பி, நம்மை மனிதப் புனிதனாக மாற்றுவதற்கு உதவுகின்றது.

இவ்வாறு றமழான் முழுவதும் நோன்பு நோற்றுப் பத்தாவது மாதமான ஷவ்வால் மாதத்தின் பிறை முதலாம் நாள் நோன்புப் பெருநாள் கொண்டாடப்படுகிறது.

பெருநாள் தினத்திலே, முஸ்லிம்கள் அனைவரும் தமது கடமையான "பித்ரா" தர்மத்தினை ஏழைகளுக்கு வழங்கிவிட்டு, அதிகாலையில் எழுந்திருந்து குளித்து புத்தாடையணிந்து, நறுமணம் பூசி, இன்சுவை உணவுகளை உண்டு பின்னர், பள்ளிவாசலில் ஒன்றுகூடித் தமது சகோதரர்களுடன் தோளோடுதோள் சேர்த்துநின்று பெருநாள்த் தொழுகை தொழுவர்.

பின்பு ஒருவரோடொருவர் கட்டித்தழுவி தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்வர். இதன்பிறகு, தமது உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களின் வீடுகளுக்குச் சென்று தமது மகிழ்ச்சியைத் தெரிவிப்பதுடன், பரிசுப் பொருட்கள், உணவுகள் என்பவற்றையும் பரிமாறி மகிழ்வர்.

இதுவே இன்பம் பொங்கும் ஈகைத் திருநாளாகும்.

நன்றி
திருமதி பாயிஷா அபுசாலி
தமிழாசிரியை

தமிழ்த்திறன் போட்டி முடிவுகள் 2021

இணையவழி மூலம் நடைபெற்ற தமிழ்த்திறன் போட்டிகளுக்குச் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல்உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, போட்டிகளில் வெற்றிபெற்ற மற்றும் பங்குபற்றிய அனைத்து மாணவச் செல்வங்களுக்கும் எமது இதயபூர்வமான பாராட்டுக்களையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தமிழ் திறன் போட்டி 2021 முடிவுகள்:

கதை - பாலர் பிரிவு

முதல் நிலை: செல்வி தரணிகா பெயரிமோகன்

இரண்டாம் நிலை: செல்வி ஜனனி ஸ்ரீவிஸ்வாசன்

கதை - ஆரம்ப பிரிவு

முதல் நிலை: செல்வன் சன்வர் சாய் ஸ்ரீராம் வெங்கடேஷ்

இரண்டாம் நிலை: செல்வி ஹரிணி பாரதிராஜா

மூன்றாம் நிலை: செல்வி தன்சிகா ஜெயமோகன்

பாடல் - பாலர் பிரிவு

முதல் நிலை: செல்வன் ஆருசன் ஸ்கந்தன்

இரண்டாம் நிலை: செல்வி அல்மிதா மயூரன்

மூன்றாம் நிலை: செல்வி தரணிகா ஜெயமோகன், செல்வி இதயதிரா மயில்வாகனம் & செல்வி வர்சிதா ஜெயசங்கர்

பாடல் - ஆரம்ப பிரிவு

முதல் நிலை: செல்வன் லக்ஷன் நிருபராங்கன் & செல்வன் டெனிஷ்வன் றொபின்சன் அமலதாஸ்

இரண்டாம் நிலை: செல்வி அருஷ்வி விசையரூபன், செல்வி நில்வியா தக்கிரன் & செல்வி ஹரிணி பாரதிராஜா

மூன்றாம் நிலை: செல்வன் ஜில்ஸ் கிஜேந்திரன்

பாடல் - மூத்த பிரிவு

முதல் நிலை: செல்வன் அனுஜன் ஜெயசங்கர்

இரண்டாம் நிலை: செல்வி நிவிஷா ஸ்ரீகந்தராஜா

மூன்றாம் நிலை: செல்வன் மதிபன் சவந்தராராஜன்

பேச்சு - ஆரம்ப பிரிவு

முதல் நிலை: செல்வி அஷ்கா கோபிகரன்

இரண்டாம் நிலை: செல்வி தருண்யா பரிதன்

மூன்றாம் நிலை: செல்வன் தருண் வசந்தகுமார்

பேச்சு - மூத்த பிரிவு

முதல் நிலை: செல்வன் கௌதிகன் நிருக்குமார்

இரண்டாம் நிலை: செல்வன் மதிரன் சவந்தராராஜன்

பேச்சு - மத்திய பிரிவு

முதல் நிலை: செல்வி லக்ஷ்மிதா உருத்திரன்

இரண்டாம் நிலை: செல்வன் நீரஜன் பரிதன் & செல்வி சங்கா விமலகாந்

மூன்றாம் நிலை: செல்வி வல்வியா ஜெகதீசன்

பேச்சு - மேத் பிரிவு

முதல் நிலை: செல்வி ஹரிணி கணேசன்

இரண்டாம் நிலை: செல்வி கனகா சர்வானந்தலிங்கம்

மூன்றாம் நிலை: செல்வி பவதிரா சிவகரன்

மனனம் - பாலர் பிரிவு

முதல் நிலை: செல்வி வர்சிதா ஜெயசங்கர்

இரண்டாம் நிலை: செல்வி மோனிகா ஜெஸ்கணேஷ்

மூன்றாம் நிலை: செல்வி இதயதிரா மயில்வாகனம்

மனனம் - ஆரம்ப பிரிவு

முதல் நிலை: செல்வி அருஷ்வி விசையரூபன்

இரண்டாம் நிலை: செல்வன் டெனிஷ்வன் றொபின்சன் அமலதாஸ்

மூன்றாம் நிலை: செல்வி அஷ்கா கோபிகரன்

மனனம் - மூத்த பிரிவு

முதல் நிலை: செல்வன் ஜோதிரத் சதாரூபன்

இரண்டாம் நிலை: செல்வன் அர்ஜென் விசையரூபன்

மூன்றாம் நிலை: செல்வி இதயவாணி நிருக்குமார் & செல்வன் அனுஜன் ஜெயசங்கர்

மனனம் - மத்திய பிரிவு

முதல் நிலை: செல்வி லக்ஷ்மிதா உருத்திரன்

இரண்டாம் நிலை: செல்வன் நியாமேஷ் ராஜேஷ்

மூன்றாம் நிலை: செல்வி சங்கா விமலகாந்

மனனம் - மேத் பிரிவு

முதல் நிலை: செல்வன் மாதவ் கேதீஸ்வராராஜா

இரண்டாம் நிலை: செல்வன் ஸ்ரீராம் கணேசன்

மூன்றாம் நிலை: செல்வன் விகாசன் விஜயரட்ணம்

தனி நடிப்பு - மேத் பிரிவு

முதல் நிலை: செல்வி ஹரிணி கணேசன் (முடிவுகளின் விஷேச பாராட்டை பெற்றவர்)

கவிதை - மூத்த பிரிவு

முதல் நிலை: செல்வி இதயவாணி நிருக்குமார்

இரண்டாம் நிலை: செல்வன் ஜோதிரத் சதாரூபன்

மூன்றாம் நிலை: செல்வன் அர்ஜென் விசையரூபன்

கவிதை - மத்திய பிரிவு

முதல் நிலை: செல்வி வல்வியா ஜெகதீசன்

இரண்டாம் நிலை: செல்வன் நீரஜன் பரிதன்

மூன்றாம் நிலை: செல்வன் நியாமேஷ் ராஜேஷ்

கவிதை - மேத் பிரிவு

முதல் நிலை: செல்வன் மாதவ் கேதீஸ்வராராஜா (முடிவுகளின் விஷேச பாராட்டை பெற்றவர்)

இரண்டாம் நிலை: செல்வி பவதிரா சிவகரன்

மூன்றாம் நிலை: செல்வி மேனகா சர்வானந்தலிங்கம்